

# பரலோக பொக்கிஷங்கள்

மேலானவைகளையே நாடுங்கள்! (கொலோசெயர் 3:2)

## சம்பூர்ண ஆசீர்வாதத்தின் இரகசியம்!

எசேக்கியேல் 44-ம் அதிகாரத்தில் நாம் காணும் தரிசனத்தின்படி, ஆலயத்திலிருந்து கடந்து வந்த ஜீவ நதியின் ஆழத்தை முதலாவது அளந்தபோது 'கணுக்கால்' அளவே இருந்தது. இன்னும் சற்று ஆழத்திற்குள் சென்றபோது 'முழங்கால்' அளவு இருந்தது. அதை அடுத்த ஆழத்திற்குள் சென்றபோது 'இடுப்பளவு' இருந்தது. அதையும் கடந்து 'நீச்சல் ஆழத்திற்குள்' வந்துவிடுகிறோம்! பின்பு அந்த நதி, யாராலும் அளக்க முடியாத, பிரகாசமாய் பாய்ந்திடும் நதியாய் மாறிவிட்டது!

'இந்த நீச்சல் ஆழத்தில்' மண்ணுக்குரிய வாழ்க்கையில், 'தன்னை' முற்றிலுமாய் அழித்தவனையே பரிசுத்த ஆவியானவர் தேடுகிறார்! கணுக்கால் ஆழமோ, முழங்கால் ஆழமோ, இடுப்பளவு ஆழமோ மாத்திரமல்ல! 'அவனையே முற்றிலும் இழுத்துக் கொள்ளும்' ஆழம்! இதுவே நாம் சென்று அடைய வேண்டிய ஆழத்தின் இலக்கு!! எவ்வளவு ஆழத்திற்குள் சென்றீர்கள்? என்ற அளவுகோலை வைத்திருக்கும் தேவன், நம் அருகிலேயே இருக்கிறார்! இதை அறிந்தவர்களாய், இப்போது இருக்கும் ஆழத்தைக் கடந்து, மூழ்கும் ஆழத்திற்குள் போவோமாக! அதுவே, நாம் கிறிஸ்துவுக்குள் அடைந்திட வேண்டிய சம்பூர்ண ஆசீர்வாதம்!

*-tr*

பெட்டகம் 40 | மே | பரல்கள் 5
2024



## தானும், தன்னுடையவர்களின் பரிசுத்தம் நாடுவான், உண்மை ஊழியன்!

தேவனுடைய ஊழியர்கள் என, தங்களை அழைத்துக்கொள்ள பலர் துடித்து நிற்கிறார்கள். தாங்களாகவே தேவனுடைய ஊழியர்களாக மாறிவிட துடிப்பவர்கள், தேவனை தங்களுக்கு ஊழியனாய் மாற்றிக் கொள்ளவே முயற்சிக்கிறார்கள்! இதுபோன்றவர்கள், தேவனுடைய கிருபையை ஆதாயமாகப் பயன்படுத்திக் கொண்டு, இரட்சிப்பையும் மற்றும் பல அவரது அன்பின் பிரயாசங்கள் அனைத்தையும் தங்களுக்கே சாதகமாய் பயன்படுத்த முயற்சிக்கிறார்கள்.

இவர்களும்கூட, தேவனை தங்களுடைய நண்பனாக மாற்றிக் கொள்ள விரும்புகிறார்கள் .... அதுஏனென்றால், அந்த நண்பன் மூலமாய் தங்கள் சொந்த விருப்பங்களையும், தேவைகளையும் பூர்த்தி செய்திடவேயல்லாமல், வேறெதற்கும் அல்ல! 'தனக்காகவே தேவபக்தி' என்ற நிலை மிகவும் கொடியதாகும்.

உண்மையான நண்பர்களாய் தேவனுக்கு நிலைத்திருப்பவர்கள் 'பாவத்தைக் குறித்த' மிகுந்த கவனத்தை தங்கள் குணாதிசயமாய் பெற்றிருப்பார்கள்! அதை அவர்களும் வெறுப்பார்கள். அது மற்றவர்களிடத்திலிருப்பதையும் வெறுப்பார்கள்!

எவ்வித பாவத்தையும் தங்களுக்குத் தாங்களே நியாயப்படுத்திக் கொள்ளமாட்டார்கள்! அதுபோலவே, பிறரிடத்திலுள்ள பாவத்தையும் நியாயப்படுத்திட துணியமாட்டார்கள்! இவ்வித தரமே பூரணமான பரிசுத்தம்!

*-Ed*

### 2024 'பரலோக பொக்கிஷங்கள்' சந்தா புதுப்பிக்கவும்

வருட சந்தா **ரூ.170/-** தயவுசெய்து உடன் **M.O** செய்து அல்லது ஆன்லைன் மூலம் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு **மே 20-ம் தேதிக்குள்** அனுப்பி புதுப்பித்துக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். ஒரே விலாசத்தில் 3பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.140/- அயல்நாடு ஒரு பிரதி ரூ.950/- அனுப்ப வேண்டும். புதுப்பித்துக் கொள்பவர்கள், தங்கள் சந்தா எண்ணை குறிப்பிடவும், புதிதாய் வாங்குபவர்கள் 'புதிது' என்று குறிப்பிடவும். நன்றி!

**ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்! சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!**

வங்கி கணக்கு: MADURAI CHRISTIAN FELLOWSHIP, Indian Bank - Koodal Nagar Branch
A/c No: **502087685** IFSC Code: IDIB000K150
(பின்பக்கம் உள்ள **QR** கோடு மூலமும் அனுப்பலாம்)
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)

கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள் 207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India Cell : 98430 49935 Ph (O) 0452 - 3585200
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com
You Tube : paralogapokkishangal

## ‘மலைப்பிரதேச பூகம்பம் விளைவித்த’ சமபூமி சொர்க்கம்!

*தம்முடையவர்களுக்கு தீமையை நன்மையாக்குவார்*

*துக்கத்தின் ஊடாக நடந்திடும் ஊழியம், மிக வலிமையானது! பெரிய பாறைகள் நிறைந்த மலைபிரதேசத்தில் பூமியதிர்ச்சி ஏற்பட்டு, அந்த பெரிய ஸ்தலம் தலைகீழாக புரட்டப்பட்ட நிலையில், சில காலம் கழித்து அந்த ஸ்தலத்திற்குப் போய் பாருங்கள்:* **அழிவு நிகழ்ந்த இடத்தில், அழகிய வாசஸ்தலம்** *உண்டாகியதை காண்பீர்கள்! புரண்டு விழுந்த பாறைகளின் இடையில் ‘சல சல என ஓடும்’ நீர்த்தடாகம் உங்கள் உள்ளத்தை கொள்ளை கொள்ளும்!*

*நீரோட்டத்தின் ஓரங்களில் அழகிய தாமரை, லில்லி மலர்கள் உங்களை சிரித்த முகமாய் வரவேற்பதை பரவசத்துடன் காண்பீர்கள்! அங்கு வளர்ந்துவிட்ட நாணல் புல்களின் ரீங்கார சப்தமும் மெதுவாய் தொனிப்பதைக் காண்பீர்கள். அங்கு விஸ்தாரமாய் ‘மரண அமைதி கொண்ட’ கல்லறை தோட்டம் அனைத்தும் பூகம்பத்தால் புரட்டிப்போடப்பட்டு,* **அழகிய அமைதியான ஒரு கிராமம்** *‘தன்னில் குடியிருக்க வரும்படி’ அழைப்பு விடுப்பதையும் காண்பீர்கள்!*

> “அந்த பூகம்ப ஸ்தலம் ‘புதுப்பிக்கப்பட்ட இந்த அற்புத ஸ்தலத்தை’ பாதுகாக்கும்படி: “ஓ கர்த்தாவே பூகம்பத்திற்குப் பிறகு ஏற்பட்ட இந்த அழகிய ஸ்தலத்தை, மீண்டும் ஒரு பூகம்பம் அழித்துவிடாதிருக்க தயை செய்தருளும்” என்ற மெல்லிய விண்ணப்பம் அங்கு வீசிய தென்றல் காற்றில் நான் கேட்டு, வியப்படைந்தேன்!

*பார்த்தீர்களா, ஒரு பூகம்பத்தைக் கொண்டு ஒரே நாளில், பல மைல்கள் கொண்ட விஸ்தாரமான இடத்தை, மலைகளைப் புரட்டி தேவன் உழுதுபோட்டாரே! ஆழமான அவரது உழவுசால் அழகிய சம பூமியை காணும்படி செய்தது விந்தையல்லவோ! மலைகள் புரண்டு, சமவெளியாய் மாறிவிட்ட பின்னணியில் “தேவனுடைய சமாதானம் நித்தியத்திற்கும் நிலை நிற்குதே”*

*என உரைத்த புதையுண்ட மலையின் மெல்லிய தொனியை கேட்க முடிந்தது! தேவன் பொழிந்த கிருபையின் ஸ்தலமாகவே நான் அந்த ஸ்தலத்தைக் கண்டேன். இதமான காலை மகிழ்ச்சியும், மனதை மயக்கும் செந்நிற சூரிய கதிர்களும், 'அந்த பூகம்ப ஸ்தலத்தை' பரலோகத்தைப்போல் மாற்றியிருந்தது!*

*அந்த ஸ்தலத்தில் 'சலசலவென பெய்த' மழைச்சாரலின் காற்றுகள் சுற்றியிருந்த பள்ளத்தாக்குகளை 'மழை வாசனை நேசப் பாடல்களால்' நிறைத்து விட்டன! அது எப்படியெனில், அங்கு ஓடிக்கொண்டிருந்த நதிகளுக்கு 'நர்ஸரி பாடல்களைப்போலவும்', பறந்து சென்று கொண்டிருந்த வான்மேகங்களுக்கு ஓர் உறைவிடம் தந்த 'பறவைக் கூடுபோலவும்', புதிய சந்ததியை ஆரம்பித்து வைத்த* **எஜமானின் கரத்தைப்போலவும்** *இருந்ததைக் கண்டு வியந்தேன்!*

> **"இத்தனை மனம் குளிரச்செய்த ஸ்தலத்தில்தான் ஒரு காலத்தில் பூகம்பம் ஏற்பட்டது என்பதை ஒருவராலும் நம்ப முடியாது! துக்கமும் மனச்சோர்வும் நிறைந்த நகரத்துமக்கள், இந்தப் புனித ஸ்தலத்திற்கு வந்து பாடி, ஜெபித்து மகிழ்ந்தார்கள். அங்கு வந்த அனைவருக்கும் தேவன் புத்துணர்ச்சியை ஊட்டினார்! ஏதோ ஒரு நாள் அல்ல, வருடம் முழுவதும் அங்கு வந்தவர்களை பிரமிக்கச் செய்து ஆசீர்வதித்தார்!**

*இந்த பூகம்ப மலை பிரதேசம், தனக்குள் வைத்திருந்த இரகசிய செய்தி உங்கள் காதுகளில் தொனிக்கிறதா? பூகம்பத்தைக் கொண்டு, மலைகளை கர்த்தரே உழுதுபோடுகிறார்! உங்கள் வாழ்வில் தோன்றும் கஷ்டங்களுக்கும் துக்கங்களுக்கும் ஓர் நல்ல விடை உங்களுக்கு புரிந்துவிட்டதா? ஆம்: 'சகலமும்' தெய்வ கிருபையின் புதுவாழ்வு எனவும்! எது நடந்தாலும், 'அவருடைய சமாதானம்' எனக்குள் என்றென்றைக்கும் நிலைத்திருக்க முடியும்! என்ற பரலோக செய்தியை உங்கள் ஒவ்வொருவர் வாழ்விலும் தேவன் நிலைபெறச் செய்வாராக!*

*- Mrs.சார்லஸ் கஃவ்மென்*

---

## 'தேவனுடைய அபிப்ராயம் ஒன்றே' என் ஜீவியம்!

*பிறரிடமிருந்து விடுதலையானவனே, தேவனுக்கு அடிமை*

*ஓர் மனிதரிடத்தில் அல்லது ஓர் சூழ்நிலையில், 'தேவனுடைய அபிப்ராயமே' என் வாழ்க்கை என உறுதிப்படுத்தி, மற்றவர் அபிப்ராயம் ஒரு பொருட்டல்ல அல்லது, பிறர் அபிப்ராயம் எனக்கு பிரதானமல்ல என நீங்கள் வாழ்ந்தால், உங்கள் சந்தோஷம் குறைவதற்குப் பதிலாக சந்தோஷம் பெருகுவதை காண்பீர்கள்!*

பொல்லாத ஓர் உலகத்தின் மத்தியில்.... சூழ்நிலைகளோடும், ஜனங்களோடும் 'அவர்களின் அபிப்ராயத்தை தேடி' அதனிமித்தம் தங்களை 'சேதப்படுத்தி' நித்திய இழப்பில் உழலும் மக்கள் மத்தியில்..... நம்மைப் பெருமகிழ்ச்சியில் தங்கப் பண்ணிடும் **தேவனுடைய அபிப்ராயத்திற்காக வாழும்** இரட்சிப்பின் மகிமைதான் எத்தனை அருமையிலும் அருமை!

யாரோ உங்களுக்குத் தீங்கு இழைத்துவிட்டார்கள்! என்ற தருணத்தில், தேவனுடைய அபிப்ராயம் தேடும் ஒரு சகோதரன், எவ்வாறு தேவபக்தியாய் நடந்து கொள்வான்? "அம் மனிதனின் தவறு, எனக்கு நேர்ந்த சோதனையேயாகும்! எனவே, இந்த சோதனையில் வெற்றிவாகை சூடும் நல்ல சந்தர்ப்பத்தையே இப்போது நான் பெற்றுவிட்டேன். நான் இறுதியில் பந்தயக் கிரீடத்தைப் பெறுவதற்கு இது எனக்குக் கிடைத்த ஊக்க போனஸேயாகும்!" என்பதே சரியான, ஆரோக்கியமான பக்தியின் ஜீவியமாகும்! அதற்குப் பதிலாய், தவறு செய்த சகோதரனின் அபிப்ராயத்தையோ அல்லது உங்களைச் சுற்றியுள்ளவர்களின் அபிப்ராயத்தையோ நீங்கள் தேடி, மாறுபாடாய் நடந்துகொண்டால், சோதனையில் தோல்வியுறுவீர்கள்!

> "அநீதிக்காய் பாடுபட விருப்பம் இல்லாமல், எல்லா காரியத்திலும் தன்னை பிறருக்கு முன்பாக 'நீதிமானாக' ஒதுங்கி நின்று இயேசு ஜீவித்திருப்பாரென்றால், பாவநிவாரணம் உண்டாயிருக்குமா? அல்லது இரட்சிப்புதான் நமக்குக் கிட்டியிருக்குமா?

அப்படியிருந்திருந்தால், ஓர் ஒதுங்கிய நீதிமானாகவே வாழ்ந்து, இறுதியில் நீதிபரரான தன் பிதாவிடம் சேர்ந்திருப்பார். நம் கதியோ..... அதோ கதியாய் மாறியிருக்கும்! ஆனால், நம் இயேசு அப்படியிருக்கவில்லையே! தனக்கு இழைக்கப்பட்ட **அநீதியைச் சரியான முறையிலன்றோ தன் பிதாவின் பிரியம் அறிந்து செயல்பட்டார்!** அதனிமித்தம், அவர் காட்டிய சிலுவை வழி கண்டு, நம் உள்ளம் அவர்பால் நன்றியால் பொங்குகின்றதல்லவா!

இப்போது 'உங்களுக்கும்' யாரோ ஒருவர் அநீதி இழைத்து விட்டார்! நீங்கள் உடனடியாக, இயேசு நடந்துசென்ற நல்வழியில் நின்று, ஞானத்தோடு சிந்திக்க வேண்டியது இதுதான்: "பாவம், இம்மனிதன், இத்தீங்கினை அவன் தனக்குள் சுமந்து திரிவது துயரமன்றோ! இதற்கு மாறாக, நானோ நன்மையினால் நிறைந்திருக்கிறேனே! அவனுக்காய் நான் வருந்துகிறேன். அவனின் இப்பெருந் துயரத்தில் கொஞ்சமேனும் ஈடு செய்வதற்கு நான் என்ன

நன்மையை அவனுக்குச் செய்யலாம்?'' என்ற எண்ணம் கொண்டவனே, 'தேவனை பிரியப்படுத்தி' வாழ்வான்!

தேவனுடைய அபிப்பிராயம் எதுவோ, அதைப் பொறுத்துதான் நாம் நியாயத்தீர்ப்பின் நாளில் நியாயம் தீர்க்கப்பட போகிறோம்! எனவே மனுஷர் என்ன நினைக்கிறார்கள் அல்லது சொல்கிறார்கள் போன்ற அபிப்பிராயங்கள் ஒரு செப்புகாசு கூட கிறிஸ்துவின் நியாயசனத்திற்கு முன்பாக செல்லுபடியாகாது! அவையனைத்தும் குப்பைகள்!!

**"நீங்கள் செய்யும் ஒரு காரியத்தை, 'சொந்த ஆதாயம் கருதியே செய்கிறீர்கள்' என யாரேனும் அபிப்ராயம் கொண்டு நினைத்தால், நினைக்கட்டுமே! நீங்கள் நிஜமாகவே உங்களுக்கானதைத் தேடவில்லை என்ற உண்மையைத் தேவன் அறிந்திருந்தால் அதுபோதுமே!**

அதுபோல, உங்கள் நடவடிக்கையை ஒருவர் எடைபோட்டு, 'நீங்கள் பெருமையில் மிதக்கிறீர்கள்!' என்று நினைத்தால், அது உங்களைக் குறித்து அவர் கொண்ட சொந்த அபிப்ராயம்! நீங்களோ, உங்களைக் குறித்த தாழ்மையின் சிந்தையில் வேரூன்றி நிலைத்திருந்தால், அதுபோதும்! இவ்வாறு "தேவனுடைய அபிப்ராயம் ஒன்றே மேன்மை" என அறிந்து, அவரை மாத்திரமே பிரியப்படுத்தி, தொடர்ச்சியாய் பல்லாண்டு வாழ்ந்தவர்களின் தனிப்பட்ட வாழ்க்கையையோ, குடும்ப வாழ்க்கையையோ, சபை வாழ்க்கையையோ, பாதாளம் எழும்பி வந்தால்கூட மேற்கொள்ள முடியாது! ஏனெனில், அது 'கன்மலையாகிய கிறிஸ்துவில்' (அவரது அபிப்ராயத்தில்) அஸ்திவாரம் போட்டு, கட்டி வாழ்ந்தவர்கள்! ஆமென்.

*- எலியாஸ் அஸ்லாக்சன்*

---

## 'என் துன்பங்கள்' ஊழியத்தின் பொக்கிஷங்களாகின!

*'துன்பத்தின் வழி' நடந்தவனே, வலிமையான ஊழியன்*

**ப**வுல் ஊழியம் செய்த கொரிந்திய சபை, பவுலை மெய்யாகவே 'புடைத்தது' என கூறலாம். 2கொரிந்தியர் 4-ம் அதிகாரத்தில் பவுல் கூறும்போது "இந்த மகத்துவமுள்ள வல்லமை எங்களால் உண்டா யிராமல், தேவனால் உண்டாயிருக்கிறதென்று விளங்கும்படி **'இந்த பொக்கிஷத்தை' மண்பாண்டங்களில்** பெற்றிருக்கிறோம். நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப் போகிறதில்லை, கலக்கமடைந்தும் மனம் முறிவடைகிறதில்லை. துன்பப்படுத்தப் பட்டும் கைவிடப்படுகிறதில்லை! கீழே தள்ளப்பட்டும் மடிந்து

*போகிறதில்லை!" எனக் கூறினார். சத்தியத்திற்கு தூணாய் நின்ற பவுல் அப்போஸ்தலனுக்கு, அவர் ஊழியம் செய்த சபையில் அவருக்கு ஏற்பட்ட கொடிய துன்பங்களைப் பாருங்கள்! பவுல் அடைந்த துன்பங்கள், கிறிஸ்து அடைந்த துன்பங்களுக்கு சமமானது என்றே கூறலாம்.*

*ஏனெனில், அவை யாவும்* **'உள்ளான' துன்பங்கள்!** *முழுவதும் ஆத்துமாவிற்கு உரியவைகள்! கொரிந்திய சபையில், பவுலுக்கு விரோதமானவர்கள் கொண்டு வந்த தாக்குதல்களின் வேதனை அவ்வளவு கொடூரமாயிருந்தது.* **"தான் வெறும் மண்பாண்டம்" என தன் பெலவீனத்தை உணரும் கடைசி எல்லை வரை** *பவுல் தாக்கப்பட்டார். ஆத்துமாவிற்கு ஏற்படும் துன்பம், சரீர துன்பத்தை விட கொடிய வலியது! பவுல் அடைந்த துன்பத்திலிருந்து, அனேக சத்தியங்களை நாமும் அறிந்து கொள்ளச் செய்திருக்கிறார். அவைகளில் சில, 'மனமடிவிற்கு ஏதுவாயிருந்தது' என பவுலே இந்த வசனத்தில் கூறியுள்ளார். ஆகிலும் "நானோ அந்த கதிக்கு ஆளாகவில்லை" என பவுல் வெற்றி முழக்கமிட்டார்!*

> *'**து**ன்மார்க்கம்' தனக்குதானே போதித்துக் கொள்ளும் திறனுடையது! கோபம் கொண்ட ஆவியுள்ளவன் 'எதை வேண்டுமானாலும்' தர்க்கத்திற்கு கொண்டு வருவான்! பொறாமை கொண்டவன், குற்றம் சாட்டும் தருணத்திற்காகவே, காத்திருப்பான்! எவ்வளவு பரிசுத்தமாய் ஜீவித்தாலும், அவர்களையும் குற்றப்படுத்துவான்! தேவ குமாரனையும் தாக்குவான்.... எத்தனை உண்மையாய் வாழும் உத்தம தீர்க்கத்தரிசிகளையும் தாக்குவான்! உபவாசத்தோடு வந்த யோவான் ஸ்நானகனைப் பார்த்து "இவனுக்குள் பிசாசு இருக்கிறது" என தாக்கினார்கள்! புசிப்புடனும் குடிப்புடனும் வந்த கிறிஸ்துவை "பெருந்திண்டிக்காரன்" என தாக்கினார்கள்!*

> "
> இவ்வாறு நன்மை அனைத்தும் தீமையாய் பரிகசிக்கப்பட்ட நேரத்தில், துன்பங்களை தன் ஆத்துமாவில் சகித்த பவுல் 'இவை அனைத்தும் எனக்கு பொக்கிஷங்களாய் மாறின' எனக் கூறிய அவரின் சாட்சியே.... "தேவனுடைய உத்தம ஊழியன்" என்ற பங்கை அவருக்கு கொண்டு வந்து கொடுத்தது!

*எந்தவொரு கிறிஸ்தவ ஊழியனும், இவ்வாறு "தேவ ஊழியனாய்" அங்கீகரிக்கப்படுவதற்கு,* **இந்த துன்பத்தின் வழியே** *இன்றும் நிலை நிறுத்தப்பட்டிருக்கிறது!*

இதை பவுல் குறிப்பிடும்போது "சுவிசேஷத்தை எங்களிடத்தில் ஒப்புவிக்கத்தக்கதாய், தேவன் எங்களை உத்தமரென்று எண்ணின படியே, நாங்கள் மனுஷருக்கு அல்ல, எங்கள் இருதயங்களைச் சோதித்தறிகிற தேவனுக்கே பிரியமுண்டாகப் பேசுகிறோம்" எனக் கூறினார் (1தெச.2:4). ஆகவே, எந்த துன்பத்திலும், தேவனால் அங்கீகரிக்கப்படும்படி தன்னை ஒப்புக்கொடுக்க வேண்டும் என்பதை பவுல் அறிந்திருந்தார். "மனதில் தோன்றும் எதை வேண்டுமானாலும் பேசும் மனிதர்களுக்கு" அஞ்சி, அவர்களைப் பிரியப்படுத்த கூடாது என்பதையும், உத்தம ஊழியனின் பங்காய் கூறினார். துன்பங்கள் அனைத்தும், தன் இருதயத்தை தேவன் சோதித்தறியும் முக்கிய நேரமாய் காண்பதற்கும் பவுல் நன்கு அறிந்திருந்தார். பரிசுத்தவான் *தாமஸ்கெம்பிஸ்* கூறியதை நான் மறப்பதில்லை, அவர் கூறினார்:

> **"என்னுடைய சமாதானத்தை, மனுஷனுடைய நாவை சார்ந்து கொள்ளாதிருக்க பல வருடங்களுக்கு முன்பாகவே தீர்மானித்தேன்! மனுஷர்கள் நம்மை நியாயந்தீர்ப்பது நன்மையாயிருந்தாலும் அல்லது தீமையாயிருந்தாலும் அவர்களைக் குறித்து நமக்கு கணக்கு இல்லை..... நம்மிடம்தான் கணக்கு கேட்கப்படும்!" என கூறினார்.**

எந்தவொரு கிறிஸ்தவனும் முதலாவது தகுதிபெற வேண்டிய இடம் "**மற்றவர்களால் தீது பேசப்பட**" தன்னை தயார் நிலையில் வைத்துக் கொள்வதுதான்! நீங்கள் ஒன்றும் செய்யாதிருந்தால் "சோம்பேறி" என தீது மொழி கேட்கும்! எதையாகிலும் ஒன்றைச் செய்தால் "இவைகளை ஏன் செய்யவில்லை?" என தீதுமொழி கேட்கும்! நீங்கள் மெய்யாய் கிறிஸ்துவின் சீஷர்களாகவோ அல்லது அவரது ஊழியர்களாகவோ இருந்தால், உங்களைச் சுற்றியுள்ள ஜனங்களில் சிலர் "**பூச்சியைப் போல்**"நிற்பார்கள். பூச்சி நிற்பதை காண முடியாது. ஆனால், அவ்வப்போது கொட்டும் போது 'அந்தப் பூச்சிகளை' காண்பீர்கள்! பரம ஜீவ பயணம் செய்ய துணிந்தவன், தன் பயணத்தில் துன்புறுத்தும் 'பூச்சிகளையும் தாண்டி வர' கண்டிப்பாய் தன் மனதை பரிசுத்தாவி துணையோடு, திடப்படுத்திக் கொள்ள வேண்டும்!

> **மனிதர்கள் புகழும் எவ்வித புகழ்ச்சியும், உங்களை தேவனுக்குப் பிரியமாய் மாற்றிட இயலாது! அதேபோல, உங்களை துன்மார்க்கமாய் புறங்கூறும் நாவுகள், "தேவன் தன் ஜனத்தின் மீது வைத்திருக்கும் நல்ல சாட்சியாகிய அவரது மனநிலையை எவ்விதத்திலும் மாற்றிட இயலாது!"**

*தேவன், நம் ஒவ்வொருவரையும் அறிந்து வைத்திருக்கிறார்! நாம் நின்றாலும் அல்லது வீழ்ந்தாலும், நம் ஆண்டவருடைய பூரண அறிவின்படியே சகலமும் நடக்கிறது என்பதை அவரது பக்தர்கள் யாவரும் நன்றாய் அறிந்திருப்பார்கள்! இங்கு மீண்டும் நான் வலியுறுத்திக் கூறுவதெல்லாம்* "**ஓ கர்த்தாவே, என்னுடைய சமாதானம் மனுஷருடைய நாவுகளைச் சார்ந்திராதிருக்க கிருபை செய்தருளும்!** *என்னைக் கொட்டும் பூச்சிகள் தொந்தரவாய் தோன்றினாலும்.... நானோ, பயணத்தின் முடிவை அடைந்து, உம்மால் அங்கீகரிக்கப்பட்ட மெய் சீஷனாகவோ அல்லது உத்தம ஊழியனாகவோ நிலைநின்றிட கிருபை செய்தருளும்!" என நான் ஏறெடுக்கும் ஜெபமே, உங்கள் ஜெபமாயும் மாறட்டும்!*

*- A.W.டோசர்*

---

## 'தேவன் நியமனம் செய்த பாடுகளையே' ஏற்றுக்கொள்ளுங்கள்!

*நன்மைக்கு தீமை அனுபவிப்பதே கிறிஸ்தவம்*

*அற்புத சுகம் பெற்ற நான், சில வாரங்கள் ஓய்ந்திருந்தேன். அந்த நாட்களில், என்மீது ஆண்டவர் கொண்டிருந்த அன்பை இன்னும் சில சாட்சிகளைக் கொண்டு ஸ்திரப்படுத்தினார். பரிசுத்தவான் தந்தை லா-கோம்பே அவர்களை தேவன் என்னிடத்தில் அனுப்பி, எனக்கு அற்புத சுகம் கொடுத்ததை நான் எண்ணிப் பார்த்து கர்த்தரை ஸ்தோத்தரித்தேன். மடத்திலுள்ள எல்லோரும்* **எனது அற்புத சுகத்தை கண்டபடியால்,** *என்னுடைய இருப்பிடத்தை ஒரு தூய்மையான ஸ்தலமாய் அமைப்பது நல்லது என்ற ஆலோசனையை, நானும் ஏற்றுக்கொண்டேன்! நோய்ப்பட்ட நான் மரண விளிம்பிலிருந்து சுகமாக்கப்பட்டபடியால், என்னுடைய இருப்பிட மாளிகையை ஒரு மருத்துவமனையாக மாற்றி, ஏழை நோயாளிகள் தங்குவதற்கு படுக்கைகளையும், சில நர்ஸ் கன்னியாஸ்திரீகளையும் நியமனம் செய்திட தந்தை லா-கோம்பே அவர்கள் பொறுப்பெடுத்துக்கொண்டார்கள். ஆனால் மருத்துவமனை அறை கட்டுவதற்குரிய மற்றும் அதற்குரிய அனேக தேவைகளை சந்திக்க என்னிடம் போதுமான பணம் அப்போது இல்லை! நான் வழக்கம் போல் என் தேவைகள் அனைத்தையும் சந்திக்கும் சர்வ வல்லவரிடமே வேண்டுதல் செய்தேன்! யாதொரு வெளிப்படையான கிரியை இல்லாத அந்நேரத்தில், "மருத்துவமனையை கர்த்தருக்கே அர்ப்பணித்து" ஜெபம் ஏறெடுத்தேன். அன்று எனக்கு வந்திருந்த "எனது ஆஸ்தியின் உபரித் தொகையை" கொடுத்து சில படுக்கைகளை அமைத்து பணி செய்திட துவங்கினேன். நான் ஆச்சரியப்படத்தக்க*

வகையில், அநேகர் தானாகவே முன்வந்து இந்த மருத்துவமனை பணிக்கு கைக்கொடுத்தார்கள். சில செவிலிய கன்னியாஸ்திரீகள் மாத சம்பளம் ஏதும் இல்லாமல் தியாகத்துடன் பணி செய்ய முன் வந்தார்கள். மருத்துவமனைக்குத் தேவையான மருந்து வகைகளை என் சேமிப்பிலிருந்து எடுத்து வாங்கி வைத்தேன்.

“ **இவ்வாறாக, மருத்துவமனை ஒரு குறைவும் இல்லாமல் நடப்பதற்குரிய அனைத்து ஏற்பாடுகளையும் தேவனே முன் நின்று ஏற்படுத்தினார்!**

மனப்பூர்வமாய் பணியாற்ற வந்த அனைவரையும் அழைத்து “பிரிய சகோதரிகளே, ஓர் சிறிய, ஆகிலும் வலிமையான ஆலோசனை ஒன்றை நீங்கள் யாவரும் கடைசி வரை காத்து பணியாற்றிட விரும்புகிறேன்:

“ **அதுஎன்னவெனில், மென்மையான தெய்வீக சுபாவமும், கிறிஸ்துவின் தயவான அன்பும் நிறைந்து, எளிய நோயாளிகளுக்கு பணிவிடை செய்யுங்கள்” என கூறினேன்!**

இந்த ஒரு ஆலோசனையே மருத்துவ சேவைக்கு முக்கியமான ஆலோசனை என்பதை நான் அறிவேன்.

இதுபோன்ற ஆசீர்வாதம் நிகழ்ந்த அதே நேரத்தில், ஜெனிவா பிஷப் மூலமாய் உபத்திரவங்கள் என்னைத் தொடர்ந்தன. நான் தொடர்ந்து கர்த்தருக்குப் பிரியமாய் முன்னேறிச் செல்வது அவருக்குள் கசப்பை ஏற்படுத்தியது. இப்போது, அவர் பகிரங்கமாகவே “**தன்னைச் சுற்றியுள்ள எல்லோரையும் மேடம் குயான் ஆதாயமாக்கிக் கொண்டார்கள்**” என குற்றப்படுத்திய பிறகு, எல்லோரும் அறிய பகிரங்கமாகவே “இவர்களை இந்த டயோஸியஸில் தொடர்ந்து வைத்துக்கொள்ள, என்னால் முடியாது!” எனவும் கூறிவிட்டார்!

**யாதொரு தீமையும் நான் செய்யாமல் நன்மை ஒன்றை மாத்திரமே செய்து வந்த என்னை அவர் பகைத்தார்!** அந்த நன்மை அனைத்திற்கும் மூல தனமாய் தேவன் ஒருவரையே என் பட்சத்தில் வைத்திருந்தேன்! இது தவிர, என்மீது அவர் பகை கொண்டதற்கு எந்தவொரு முகாந்தரமும் இல்லை. அதுமாத்திரமல்லாமல், எனக்கு சாதகமாய் பணி செய்த மடத்து கன்னியாஸ்திரீகள் மீதும் அவர் கோபம் கொண்டார். இதுபோன்ற சூழலில் “அதிகமான சமாதானமும் அமைதியும்” என் உள்ளத்தில் ஆட்கொண்டிருந்தது!

இதே சமயத்தில், என் உதவிக்காக நான் அழைத்து வைத்திருந்த பணிப்பெண், நான் வியாதிப்பட்ட நேரத்தில், என் சரீரத்தில் பல தீங்கு

*செய்தார்கள். இச்சமயத்தில் என் சிந்தையை ஆட்கொண்டதெல்லாம் "இந்தப் பணிப்பெண்ணை நான் அல்ல, கர்த்தரே தெரிந்து கொண்டு என்னிடத்தில் அனுப்பி வைத்தார்! ஆகவே, இந்நிலையில்* **நான் அவளை அன்புகூர்ந்து** *தாங்கிக்கொள்ள வேண்டியது கர்த்தருடைய தயவுள்ள சித்தம்!" என அறிந்து மனப்பூர்வமாய் அன்புகூர்ந்து சகித்துக்கொண்டேன்!*

*- மேடம் குயான்*

---

## கள்ளனுக்கும், பெருவெள்ளத்திற்கும் தப்புவித்த கர்த்தர்!

*உத்தம ஊழியனை, கர்த்தர் காப்பார்*

**ப**ரமானந்தமாகிய நான், இராயபுரம் சபையின் ஊழியனாக ஊழியம் செய்து கொண்டிருக்கையில், **1916**-ம் வருஷம் நான் தென் இந்திய சபைகள் எங்கும்போய், திருவசனத்தைப் பிரசங்கிக்கும்படி சுவிசேஷப் பணி கமிட்டிமார் என்னை ஏற்படுத்தினார்கள். அதன் பிரகாரம், நான் எங்கும்போய் பிரசங்கித்து வந்தேன்!

மதுரை மிஷனைச் சேர்ந்த செவல்பட்டியில் பிரசங்கித்துவிட்டு, ஒரு மாட்டுவண்டியில் அறுப்புக்கோட்டைக்குத் திரும்பினேன். பாதிவழி வந்தபோது, சூரியன் அஸ்தமித்து இருட்டு ஆரம்பித்தது. வண்டிக்காரன் என்னைப் பார்த்து: ஐயா, இது பொல்லாத இடம். பக்கத்தில் கிராமங்கள் இல்லை. இங்கேதான் திருடர்கள் வந்து தொல்லைகள் கொடுப்பார்கள் என்றான். மறுபடியும் அவன் என்னைப் பார்த்து: ஐயா, நான் சொன்னது சரியாய்ப் போச்சே. மரத்தடியிலிருந்து ஒரு தடியன் நம்மை நோக்கி வருகிறானே, என்ன செய்வோம்? என்றான். "நீ வண்டியை நிறுத்தாமல் ஓட்டிக் கொண்டே போ" என்றேன். இதற்குள்ளாக அந்தக் கள்ளன் கத்தியோடும், கையில் தடியோடும் **வண்டியின் பின்பக்கமாக வந்து**: நீ யார்? எங்கே போகிறாய்? என்று என்னைக் கேட்டான். நல்லவேளை, கள்ளன் நேராக வண்டிக்காரனிடம் போகவில்லை. வண்டிக்காரனிடம் அவன்போய்த் தடியை ஓங்கி "வண்டியை நிறுத்துடா" என்று சொல்லியிருந்தால் அவன் அலறியிருப்பான். மேலும் "நான் என்ன செய்யமுடியும் ஐயா? நான் தடுத்திருந்தால் எனக்குக் கத்திக்குத்து கிடைத்திருக்கும்" என்றுதானே அந்த வண்டிக்காரன் கூறுவான்! அப்படி நடக்காமல், அந்த கள்ளன் நேரே என்னிடம் வந்து விசாரித்தான்.

" நான் கள்ளனைப் பார்த்து: "நான் கடவுளுடைய ஊழியக்காரன். செவல்பட்டியில் பிரசங்கித்துவிட்டு அறுப்புக்கோட்டைக்குப்

போகிறேன்'' என்றேன். ''அப்படியா? நீ கடவுள் ஊழியக்காரனா? கடவுளைப் பிரசங்கிக்கவா போகிறாய்? போ, போ'' என்று சொல்லி, வண்டியைத் தொடாமல் அங்கேயே நின்றுவிட்டான்.

வண்டிக்காரனுக்கு இது ஆச்சரியம்: ''என்ன ஐயா, திருட வந்தவன் உங்களைத் தொடாமல் அப்படியே நின்றுவிட்டானே'' என்றான். ''**அது கடவுளுடைய செயல்**'' என்றேன். ''துன்மார்க்கன் நீதிமான் மேல் கண்வைத்து, அவனைக் கொல்ல வகைதேடுகிறான்; கர்த்தரோ இவனை அவன் கையில் விடுவதில்லை'' (சங்.37:32,33) என்ற வசனம் நிறைவேறியதைக் கண்டு, நான் கர்த்தருக்கு நன்றி கூறினேன்!

மற்றொரு முறை ''டேனிஷ் மிஷன் கனம் **ஆண்டர்சன் ஐயர்** அழைப்பின் பேரில், தேவ ஊழியருக்குக் கூட்டங்களை நடத்தும்படி திருக்கோயிலூருக்குப் போனேன். திருக்கோயிலூர் ஸ்டேஷனில் நான் இறங்கினபோது இருட்டாயிருந்தது. ஸ்டேஷன் மாஸ்டர் என்னைப் பார்த்து: ஆற்றில் வெள்ளம் போகிறது. நீங்கள் ஸ்டேஷனில் இராாத்தங்கி காலையிலே போவது நல்லது. அதற்குள்ளாக வெள்ளம் குறைந்து விடும்; இப்போது ஆற்றைக் கடக்கிறதாயிருந்தால் ஆபத்து. 'வெண்ணை உருகுமுன் பெண்ணை உருகும்' என்ற சொற்படி, திடீரென வெள்ளம் வந்துவிடும் என்று எச்சரித்தார். என்னை அழைத்து வர, மிஷனெரி அனுப்பின இரண்டு ஆட்கள் ஸ்டேஷன் மாஸ்டரைப் பார்த்து: ஐயா, நாங்கள் வந்திருக்கிறோம், வண்டியைப் பிடித்துப் பத்திரமாகக் கரை சேர்ப்போம் என்று சொன்னார்கள். வண்டிக்காரன் என்னை வண்டியில் ஏற்றிக்கொண்டு ஆற்றில் இறங்கிவிட்டான். மற்ற இரண்டுபேரும் வெற்றிலைபாக்கு வாங்கிப் போட்டுக்கொண்டு பிந்தி வந்தார்கள். இதற்குள்ளாக வண்டி நடு ஆறு சேர்ந்தது. திடீரென வந்த வெள்ளப் பெருக்கினால் வண்டி தள்ளாடினது! வண்டி வழி விலகி ஒரு பள்ளத்தில் இறங்கிவிட்டபடியால் மாடுகள் மிதந்தது. வண்டிக்காரன், வண்டியில் கடைசியில் உட்கார்ந்திருந்த என்னைப் பார்த்து: ஐயா, முன்பாரம் இல்லை, வண்டி மிதக்கிறது, மாடுகள் தத்தளிக்கிறது, என் முதுகுப் பக்கம் வந்து உட்காருங்கள் என்றான். அப்படியே செய்தேன்!

மற்ற இருவரும் இருட்டில் தூரத்தில் வந்து கொண்டிருந்தார்கள். வண்டி தண்ணீரில் அமிழ்வதை நான் கண்டு, வேகமாய் பின்பக்கம் வந்து, **உடுத்தின உடுப்புடன் வெள்ளத்தில் குதித்தேன்.** ஆற்றில் கழுத்தளவு வெள்ளம் ஓடினது. வண்டி அமிழ்ந்ததையும், மாடுகள் மிதப்பதையும் கண்ட அவ்விருவரும் வண்டிக்காரனைக் கூப்பிட்டு: ஐயர் எங்கே? என்று கேட்டார்கள். வண்டிக்காரன் என்னைக் காணாததால் ''அவர் எங்கேயோ தெரியவில்லை'' என்றான். இதோ, நான் இங்கே

இருக்கிறேன் என்று வெள்ளத்திலிருந்து கத்தினேன். ஒருவன் என் சத்தம் கேட்ட திசைநோக்கி வந்து என் கையைப் பிடித்துக்கொண்டான். **இருவரும் ஆழத்தில் நடந்து கரை சேர்ந்தோம்.**

நடந்த ஆபத்தை அறிந்த ஆண்டர்சன் துரை மிகவும் விசனப்பட்டு, நனைந்த என் உடுப்புகளைக் களைந்து, வேறு உடுப்புகளை உடுத்தக் கொடுத்தார். வெள்ளத்திற்குப் பயந்து நான் தண்ணீரில் குதிக்கத் தாமதித்திருந்தால் வண்டியோடு சேர்ந்து அமிழ்ந்துபோயிருப்பேன். கர்த்தர் என்னைக் காப்பாற்றி மறுநாள் காலைமுதல் தேவ ஊழியருக்கு அருமையான கூட்டங்கள் நடக்கும்படி கிருபைசெய்தார். "**நீ தண்ணீர்களைக் கடக்கும்போது நான் உன்னோடு இருப்பேன்;** நீ ஆறுகளைக் கடக்கும்போது அவைகள் உன்மேல் புரளுவதில்லை" (ஏசாயா 43:2) என்ற வாக்கு நிறைவேறியதைக் கண்டு கர்த்தருக்கு நன்றி கூறினேன்!

- பரமானந்தம் ஐயர்

---

## 'அன்பின் அக்கினியில்' நிலைநின்ற சாதுசுந்தர்சிங்!

*தேவ அன்பால் நெருக்கி ஏவப்படுவதே 'ஊழியம்'*

**சா**து சுந்தர்சிங் கடந்து சென்ற வாழ்வின் தன்னயமறுப்பும், கிறிஸ்துவைப் போன்ற துன்பமும், உலகத்தில் வெகு சில பரிசுத்தவான்கள் மாத்திரமே அடைந்திருக்கக்கூடும்! இந்து மதத்திலிருந்து கிறிஸ்துவினிடம் சுந்தர்சிங் நடந்துவந்த வழி, நெருக்கமும் முட்களடர்ந்ததுமாயிருந்தது.

> "முள்முடி சூடினவராய்" கிறிஸ்துவைத் தரிசனத்தில் கண்டு, மன சாந்தியாகிய பூரண சமாதானத்தை அவர் பெற்றுக் கொண்டபின், கிறிஸ்துவினிமித்தம் இவர் பட்ட எந்த துன்பமும் அவருக்குப் பாரமாய் தோன்றினதில்லை!

வார்ட்ஸ் பண்டிதர் பாடின, அடியிற்கண்ட, கவியின் பொருள் அவரிடம் அப்படியே நிறைவேறியது!

**சராசரங்கள் அனைத்தும்**

**அவரன்புக்கு எம்மாத்திரம்?**

**என் ஜீவன் சுகம் செல்வமும்**

**என் நேசருக்குப் பாத்தியம்!**

சுந்தர்சிங் இயேசுவின்மீது கொண்டிருந்த பக்தி, "தம்முடையதென்று அழைக்கக்கூடிய யாவற்றையும், அவருக்குத் தத்தம் பண்ணினாலன்றி, திருப்தியடைய மாட்டேன்" என்பதாய்

*இருந்தது! இவ்வித பக்தியின் ஏவுதலால், தன்னைச் சர்வ சமூல மாய் கிறிஸ்துவுக்குக் கையளித்துவிட்டு, கர்த்தரின் கிருபையின் கடாட்சத்தால், தன் ஜீவிய காலம் முழுவதையும் 'கர்த்தருக்கு ஊழியம் செய்து' கழித்திட சுந்தர் உறுதி தீர்மானம் எடுத்துக்கொண்டார்!*

*"அன்பைப் பெருக்கி, எனது ஜீவனை காக்கவந்த இன்ப பெருக்கன்றோ என் ரட்சக பெருமான்!" என, தமிழ்நாட்டுப் பக்தன் ஒருவர் பாடி மகிழ்ந்த பராபரனின் அன்பிற்கொத்த அன்பே, வயதிற் சிறியவரான சுந்தர் மனதிலும் தோன்றி, மனிதரை ஜீவ பாதையில் நடத்த வேண்டுமென்ற பேராவலை உண்டாக்கிற்று! சிறுமைப்பட்டு, தெய்வ அழைப்பினிமித்தம் துரத்துண்டு, சில நாட்களுக்குமுன் விட்டுவந்த தம்முடைய சொந்த ஊரிலுள்ளவர்களுக்கே முதன் முதல் இவர் போய் சுவிசேஷ செய்தியை சொல்ல வேண்டுமென்று உந்தப்பட்டார்!*

> "**தம்முடைய குடும்பத்தால் நீசனென்று தள்ளிவிடப்பட்ட சில மாதத்திற்கெல்லாம் சுந்தர் *ராம்பூரின்* தெருக்களில், தாம் சேவித்து வரும் இயேசுவின் அன்பையும், அவரருளால் தமக்குண்டான சமாதான பாக்கியத்தையும் பற்றித் தைரியமாகப் பேசுகிறவராகக் காணப்பட்டார்.**

*வீதிகளில் நின்று ஆண்களுக்கு மாத்திரமல்ல, சாதுவைத் தம் வீடுகளுக்கழைத்தனுப்பிய உயர் குலப் பெண்களுக்கும் கிறிஸ்துவின் புனித இரட்சிப்பை சொல்லி வந்தார். அங்கிருந்து தனிமையாய், ராம்பூருக்கருகிலுள்ள கிராமங்களுக்குச் சென்று "கிறிஸ்து ஒருவரே வழி! அவராலன்றி ஒருவரும் பாவ மீட்பையும், தெய்வ சமாதானத்தையும் பெறமுடியாது!" என சுவிசேஷ முழக்கமிட்டார்.*

*பஞ்சாபில் அநேகப் பட்டணங்களையும் கிராமங்களையும் கடந்து வடக்கேயுள்ள ஆப்கானிஸ்தானுக்கும், காஷ்மீருக்கும் போனார். இந்த நெடும்பிரயாணம் இதற்குமுன், அவர் செய்யாததாலும், இப்பிரயாணத்தில் வேளைக்கு வேளை ஆகாரம் கிடையாமற் போனதாலும் சுந்தர் உடல் களைத்துப்போனார். மேலும், அவர் சென்ற இடமெல்லாம் சுவிசேஷ பணி மிக கடினமாயிருந்தது! இப்பிரதேசங்களில் சஞ்சரித்த முரட்டு மனிதர்கள் சுந்தர் எடுத்துரைத்த நற்செய்தியை ஏற்றுக்கொள்ள மனமற்றறவர்களாய் இருந்தார்கள்! ஆனால், ஜலல்பாத் என்ற பூர்வீகப் பட்டணத்தில் சில பட்டாணியர் இவரிடம் வந்து, உம்முடைய உபதேசங்களை கேட்க விரும்புகிறோம் என்றார்கள். அவர்களுடைய அந்தரங்க திட்டமோ, இவரைக் கொன்றுபோடவேண்டுமென்பதே ஆகும். அவர்களால் ஏற்பட்ட தீய*

*துன்பங்களை விவரித்திட விரும்பவில்லை! ஏனெனில், சொல்லிமுடியா தீங்குகளை சாதுசுந்தர்சிங் அனுபவித்தார்!*

*அவர் பிறந்து வளர்ந்த ஊருக்கருகிலும், அவர் பழகியுள்ள மலைகளின் மத்தியிலும் இருந்த மூட அந்தகாரம் நிறைந்துள்ள நாடுகளுக்கு நீதியின் சூரியனான கிறிஸ்துவின் சுடரொளியைக் கொண்டுபோக வேண்டுமென்ற பேராவல் அவரிடம் அதிகமாய் வளர்ந்தது! கிறிஸ்துவின் நாமம் உச்சரிக்கப்படாத, துன்பமும், உயிர் பயமும் நிறைந்த ஸ்தலங்களையும், நாடுகளையும் ஏன் சுந்தர் துணிந்து தெரிந்து கொண்டார்? என நாம், வியப்புற இடமில்லை. ஏனெனில், கிறிஸ்துவினிடம் சுந்தர் கொண்டிருந்த, "அன்பின் வைராக்கியம்" அவரிடம் அவ்வளவாய் பற்றி எரிந்து கொண்டிருந்தது!*

*- சாது சுந்தர்சிங்*

---

## "சபையின் பக்திவைராக்கியம்" இல்லாமல் சீஷன் இல்லை!

*'தூய சாட்சியை' சபை வாஞ்சிக்க வேண்டும்*

*ஆலய பிரகாரங்களை, வியாபாரமயமாக்கினவர்கள்மீது இயேசுவுக்கு, அவ்வளவு கோபம்வரக் காரணம் என்னவென்று நாம் வியக்கலாம்! அவர்கள் விற்றுக்கொண்டிருந்த பறவைகள், மிருகங்கள் எல்லாம் பலியிடத்தானே! காசு மாற்றியது, ஆலய வரி கட்டத்தானே! ஆனால்* "**சபையின் தூய நோக்கம்**" *துர்ப்பிரயோகம் செய்யப்பட்டதாலேயே இயேசு கொதித்தெழுந்தார்! வியாபார ஸ்தலமாய் பாழடித்தவர்களைப் பார்த்து, அவர் சொன்னார்:*

> **"என் வீடு ஜெப வீடு என்று எழுதியிருக்கிறது; நீங்களோ அதைக் கள்ளர் குகையாக்கினீர்கள்" (மத்.21:12,13). இதைவிடக் கடுமையான வார்த்தைகள் சொல்வதரிது! இக்கால திருச்சபைகளுக்கும் இவ்விதக் கடிந்து கொள்ளுதல் பொருந்தும்!**

*நியாயமான எத்தனையோ காரியங்கள் நாம் செய்யலாம்; ஆனால் அதில் முதன்மைத்துவம், முன்னுரிமை எதற்குத் தரப்படுகிறது? பல்வேறு வகைகளில் நமது சபை கட்டிடங்களைப் போற்றி, மேன்மைப்படுத்தலாம்.... ஆனால், பரிசுத்தவான்களின் "ஜெபங்கள்" எனும் "தூப வாசனை" சபையில் தேவனுக்குமுன் எழும்புகிறதா? (வெளி.8:4). பண்டிகைகளுக்கும், வைபவங்களுக்கும் நமது ஆலயங்கள் நிரம்பி வழிகின்றன;*

***ஆ**னால், உபவாசத்திற்கும் மன்றாட்டு ஜெபத்திற்கும் வருவோரின் எண்ணிக்கை பரிதாபமல்லவா? வார நாட்களில் நடக்கும்*

*ஜெபக்கூட்டங்களுக்காய் வருவோரின் எண்ணிக்கை கர்த்தர் மகிழும் ஜனத்திரளாய் இருப்பதில்லையே? தேவாலயத்தை துர்ப்பிரயோகித்தோர்மீது இயேசுவின் கோபத்தை யோவான் எப்படி விவரிக்கிறார், பாருங்கள்: "என் பிதாவின் வீட்டை வியாபார ஸ்தலமாய் மாற்றாதீர்கள்" என்றார் இயேசு. அப்போது அவரது சீடர், 'உம் ஆலயத்தின் மீதுள்ள ஆர்வம் (பக்தி வைராக்கியம்) என்னை பட்சித்தது' என்று ஆகமத்தில் எழுதியுள்ளதை நினைவுகூர்ந்தார்கள்" (யோவான் 2:14-17). ஞாயிறு ஆராதனைகளில் அறிவிப்புகளுக்கும், வரவு செலவுக் கணக்கு அறிக்கைகளுக்கும் எவ்வளவோ நேரத்தை விரயமாக்கிவிட்டு, பிரசங்க நேரத்தையோ, முப்பது நிமிடம் எனக் குறைத்து விடுகிறோம்! இப்போது, நமது ஏக்கமான ஜெபமெல்லாம் "தேவா, சாட்டையோடு பக்திவைராக்கியம் கொண்ட தீர்க்கர்களை எங்கள் நடுவில் அனுப்பிவையும்!" என்ற ஜெபமேயாகும்! ஆலயக் கட்டிடங்கள் மீது இன்று அனேகருக்கு அவ்வளவு பயபக்தி! ஆனால், சபையாரின் நித்தியத்திற்குரிய ஆன்மீக நிலை கண்டு பதறுவோர் வெகு சொற்பமே!*

"

**தேவாலயத்தை இயேசு இருமுறை சுத்தம் பண்ணினார்: ஒன்று, அவரது ஊழியத் துவக்க காலத்தில் (யோவான் 2:13-17); அடுத்தது, முடிவுக்கட்டத்தில் அவர் எருசலேமுக்குள் பவனி செல்கையில்! (மத்.21:12,13). எவ்வளவு குறைந்த இடைவெளியில் சீக்கிரமாய் திருச்சபை கெட்டுவிடுகிறது, பாருங்கள்!**

தமது தந்தையாம் தேவன் மீது தமக்கிருந்த அன்பைத் தணிக்கக்கூடிய எதற்கும் இயேசு எதிராயிருந்தார்! தாம் எவ்விதம் பாடுபட்டுக் கொல்லப்படுவார் என்று தமது சீடரிடம் மனந்திறந்து அவர் சொன்னபோது, சீமோன் பேதுரு இயேசுவைத் தனியே அழைத்துக்கொண்டுபோய், அவரைக் கடிந்து கொண்டார்! (மாற்கு.8:31,32). அவரை இயேசு எவ்விதம் கடிந்துகொண்டார், பாருங்கள்: "அப்பாலே போ, சாத்தானே. நீ தேவனுக்கு ஏற்றவை பற்றி எண்ணாமல், மனிதருக்கு ஏற்றவைபற்றியே எண்ணுகிறாய்" (வச.33) என்றார்.

"

**தேவன் மீது சிதறாத அன்பைப் பதிக்க வேண்டுமானால், "அவருக்கேற்றவை! மனிதருக்கேற்றவை!" ஆகிய இரண்டுக்கும் இடையில் சில கடினமான தேர்வு செய்யவேண்டும் என்பதையே, இங்கு இயேசு நமக்குப் போதித்தார்.**

*இது நிஜமாகவே ஒரு போராட்டம்தான்! தேவன்மீதுள்ள அளவு கடந்த அன்பின் வேட்கை மட்டுமே நம்மை வெற்றியடையச் செய்யும்! தேவனுக்கடுத்தவற்றிற்கு "ஆம்" என்றும், உலகிற்கடுத்தவற்றிற்கு "இல்லை" என்றும் சொல்ல வேண்டுமானால் வாழ்வின் சில இன்பங்களையும் வசதிகளையும் துறந்தே ஆகவேண்டும்! சுயத்தை வெறுத்து, சிலுவை சுமப்பதின் மேன்மை அதுதான் (வச.34). உன்னத தேவன்மீது அன்பும், உலகத்திலுள்ளவைமீது அன்பும், சேர்ந்து குடியிருக்க முடியாது (1யோவான் 2:15). இக்காலத்து மலிவடைந்த உபதேசங்களில், தேவனை நேசிப்பதைக் குறித்துப் பேசும்போது, அதற்கான நிபந்தனையாகிய* **சுயத்தின் மறுப்பைக் கவனியாது** *விட்டுவிடுகிறார்கள். மெய்யான சீஷத்துவமோ, "சுயத்திற்கு மரிக்கும்" சிலுவையில் மாத்திரமே அடங்கியுள்ளது!*

*- R.ஸ்டான்லி BYM*

---

## பாடுகளின் மத்தியில், பரமனை ருசிப்பது பாக்கியம்!

*சிலுவை வழியே, பரம் ஏறும் வழி*

*தன் ஒரேபேரான குமாரன், இந்த பூமிக்கு வந்தபோது பிதாவாகிய தன்னோடு உறவுகொள்வதற்கு தேவன் 'இடுக்கமான பாதையாகிய' சிலுவையின் ஜீவியத்தையே தன் குமாரனுக்கு முன்பாக வைத்தார்! இந்த வழியாகத்தான் இயேசு சென்று,* **பிதா நியமித்த** *ஏழ்மை பிறப்பு, ஏழை தச்சு குடும்பம், நாகரீகமில்லாத நாசரேத்தூர், அவரைப் புரிந்துகொள்ளாத சொந்த வீட்டார், முற்றிலும் வெறுத்த தேவாலயத்து தலைவர்கள், துரோகம் செய்த சொந்த சீஷன்.... ஆகிய பாடுகளின் வழி சென்று, முடிவாக 'முற்றிலும் ஜெயம் பெற்று' இப்போது* **பிதாவின் நீங்கா சமூகமாகிய** *அவரது வலதுபாரிசத்தில் அமர்ந்திருக்கிறார்! இந்த ஒரே சிலுவையின் வழி தவிர, பிதாவோடும் குமாரனோடும் உறவுகொள்ள வேறு வழியே இல்லை! இவ்வழி செல்ல உங்களுக்கு இஷ்டமில்லையென்றால், விசாலமான பாதையை நீங்கள் தெரிந்துகொள்ள முடியும்..... ஆனால், தேவனோ உங்களுக்குத் தூரமாய் சென்றுவிடுவார்!*

**"எப்படியெனில், இந்த வாழ்க்கைத் துணையைவிட, இந்த ஸ்தலத்தை விட, இந்த கடின சூழ்நிலையைவிட..... வேறு நபரோ, வேறு ஸ்தலமோ, வேறு சூழ்நிலையோ இருந்தால், நலம் என நீங்கள் எண்ணுவதெல்லாம், "உங்கள் கைகளால் கட்டப்படும் கோவில்களுக்கு" ஒப்பாகவே மாறிவிடும்! நீங்கள் "இது நன்றாயிருக்குமே!" எனக் கருதி கட்டும் கோவில், சித்திர வேலையினாலும், அழகான பொன் வெள்ளியுமாகவே**

இருந்தாலும்..... அந்தோ! நீங்கள் கட்டிய கோவில்களில் தேவன் வாசம்பண்ணுவதில்லை!! (அப்.17:24, 29).

*'தேவனற்ற' உங்கள் ஜீவியத்தின் துயரத்திற்குக் காரணத்தை இப்போதாவது உங்களால் கண்டுகொள்ள முடிகிறதா?*

*ஒருவேளை, தேவனாகவே என் வாழ்வின் சூழலை மாற்றுவதற்குத் தீர்மானித்தால் அப்படியே அவர் செய்யட்டும்! ஆனால் அவர் அப்படிச் செய்யாதிருக்கும் பட்சத்தில், நானாக 'அவர் வைத்திருக்கும் எல்லையை விட்டு' வெளியே வந்து, அவருடைய இனிய சமூகத்தை இழந்து அல்லலுற மாட்டேன் என்ற உறுதியில் வாழ்வதே இயேசு சென்ற வழி!*

*"தேவப்பிரியராயிராமல் சுகபோகப்பிரியராய்" மாறிக் கொண்டிருக்கும் இக்கொடிய கடைசி காலத்தில் (2தீமோ.3:4),*

*இடுக்கமான "சிலுவை பாதையை" ஜனங்கள் நாடவில்லை! ஜனக் கூட்டத்தின் பின்னால் செல்லும், பெரும்பாலான கிறிஸ்தவ சபைகளும் நாடவில்லை!*

*பரிசுத்த ஆவியானவருக்கு "தேற்றிடும் தேற்றரவாளன்" என்றே பெயர்! உலகத்திற்காக அழுதிடும் மாந்தர்களுக்கு பணம் ஆறுதல்! வேண்டியது கிடைத்தது ஆறுதல்! ஆனால் கிறிஸ்து காண்பித்த சிலுவையின் வழி மாந்தர்களுக்கே,* **அவர்களின் துன்பத்தில், பரிசுத்தாவியானவரே 'ஆறுதல்' செய்யும் பாக்கியம் தேவன் அருளுகின்றார்!**

*எலியாஸ் அஸ்லாக்சன் என்ற பரிசுத்தவான், தன் ஜீவியத்தில் 'சிலுவையின் வழியில்' வாழ்ந்து, தன் 88-வயதில் பிரகாசமுள்ள முகத்தோடு கர்த்தருடைய மகிமைக்குள் பிரவேசித்தார்! அவர் எழுதிய ஓர் இனிய கவிதையில் "ஓ என் கர்த்தாவே, வாழ்வின் சோதனை எவ்வளவு என்னை நெருக்கினும், அது என்னை உம் மார்பில் சேர்க்குமல்லவோ! இதுவே என் செல்வந்த நிலை, ஆம் விண்ணோடு இறைவன் என் சொந்தமான பரவசம்!" என இசைத்த கீதம், நம்மை பக்திவிருத்தி அடையச் செய்கிறது!*

*"தாங்கள் விரும்பும் விசாலமான பாதை" சென்று இந்த மண்ணோடு வாழ்ந்து, மண்ணாகவே மாய்ந்திடும் இக்கால சபை மாந்தர்கள் மத்தியில், தேவனோடு நெருங்கிய உறவில் நிலைத்து வாழும் ஏராளமான ஜனங்களை நம் சபைகளிலும் தேவன் எழுப்புவாராக! ஆமென்!*

*- T.ரத்தினகுமார்*

## சுவிசேஷம் செல்லாத இடம் தேடி உழைத்தவர்!

# K.பொன்ராஜ் ஐசக்



தென் இந்தியக் கடற்கரையைத் தழுவிய தூத்துக்குடி மாவட்டத்தில், மணல்விளை என்ற சிறிய கிராமத்தில், 1942-ம் ஆண்டு கிறிஸ்தவப் பெற்றோருக்குப் பிறந்த திரு.பொன்ராஜ் ஒரு எளிய துவக்கத்தையே கொண்டிருந்தார். 1967-ம் ஆண்டு ஞான ஜோதி என்ற பள்ளி ஆசிரியையை திருமணம் செய்து கொண்டார். இருவரும் ஆண்டவருக்காக சாட்சி பகரவும், ஆத்தும ஆதாயம் செய்யவும் தொடங்கினர். சுவிசேஷகர் N.ஜீவானந்தம் பிரசுரித்து வந்த "மகிழ்ச்சி" என்ற தமிழ் கிறிஸ்தவ இதழில் துணைப் பதிப்பாசிரியராக பகுதி நேரத்தில் பொன்ராஜ் ஊழியம் செய்து வந்தார். தேவனுடைய அநாதி தீர்மானத்தின்படி இப்பயிற்சி, அவரது எதிர்கால இலக்கிய ஊழியத்திற்கு வழிவகுத்தது. ஜனவரி 1971-ல், தஞ்சாவூரில் "பூரண சுவிசேஷ வாலிபர் ஐக்கிய குழு" என்று அழைக்கப்பட்ட "ஆசீர்வாத இளைஞர் இயக்கம்" நடத்திய முதல் முகாம் தொடங்கி, அவர் அதில் ஈடுபட்டார். ஒரு முழுநேர மிஷனெரியாக மாற தேவன் அவரை ஆயத்தப்படுத்தவும், வழிநடத்தவும் செய்தார். ஒரு காலைப்பொழுதில், தேவனோடு அமைதி நேரத்தில் அமர்ந்திருந்தபோது, "என்னைப் பின்பற்றி வா" என்ற மெல்லிய சத்தத்தைக் கேட்டு, என்ன வந்தாலும் ஆண்டவரைப் பின்தொடர தீர்மானம் செய்தார். வேலூருக்குச் சென்று, 1974-ம் ஆண்டு இயக்கத்தின் முதல் முழுநேர ஊழியராக இணைந்தார்.

1976-ல் ஆண்டவர், வட இந்தியாவிற்குச் செல்லும்படி பொன்ராஜை அழைத்தார்! அங்கு நிறைந்து காணப்பட்ட அதிகமான தேவையை உணரும்படி கர்த்தர் நடத்தினார். 1976-ல் ஒடிசாவிலுள்ள புவனேஷ்வர் என்ற பின்தங்கிய மாவட்டத்திற்குச் சென்று பல அழுத்தங்கள், கலாச்சார அதிர்ச்சிகள் மற்றும் சவால்களுக்கு இடையே குடும்பமாகச் சென்று 19-வருடங்கள் வாழ்ந்து பணி செய்தனர். 1995-ம் ஆண்டில் அஸ்ஸாம் மாநிலத்திற்கு இடம் பெயர்ந்து சென்று கௌஹாட்டியில் தங்கினார். பொன்ராஜ் மற்றும் ஜோதி இருவரும் அஸ்ஸாம் மொழியை வாஞ்சையோடு கற்றுத் தேர்ந்து, இலக்கண வரையறையோடு பேசவும், எழுதவும், வாசிக்கவும் தேர்ச்சி பெற்றனர். அஸ்ஸாமிலிருந்து கொண்டே, "ஏழு சகோதரிகள்" என்று அழைக்கப்பட்ட வடகிழக்கு இந்தியப் பகுதிகளை குறிவைத்து செயல்பட்டனர். கௌஹாட்டி, தேஜ்பூர், ஷில்லாங், தூரா, வில்லியம் நகர் போன்ற பட்டணங்களில் ஆசீர்வாத இலக்கிய விநியோகத் திட்டங்களை ஒழுங்குசெய்து, அய்சோல் (மிசோராம்) பட்டணத்திற்குள் கொஞ்சம் கொஞ்சமாக ஊடுருவிச் செல்ல முயற்சி செய்தார்!

அவர் அஸ்ஸாம் இலக்கியத்திற்கு அளித்த பங்களிப்பைப் பாராட்டி, "அசோமியா கிறிஸ்தோ பக்த சமாஜ்" என்ற அமைப்பு, ஒரு சிறப்பு விருதை அவருக்கு வழங்கியது. இந்தத் தாழ்மையான தற்பெருமையற்ற மிஷனெரி, தனக்கென்று பெரிய வங்கித் தொகை எதுவும் வைத்துக்கொள்ளாமல், தேவ ராஜ்ஜியத்தின் விரிவாக்கத்திற்காக அவருடைய முழுமையையும் முதலீடு செய்வதில் விருப்பமுள்ளவர். 82 வயதிலும், இந்த விலையேறப்பெற்ற 'மாணிக்கம்' முழங்காலில் நின்று வேதம் வாசித்து, கிரமமாக ஜெபம் செய்து வருகிறார். அவருடைய ஒரே வாஞ்சையும், நோக்கமும் "சாட்சியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை" வாழ வேண்டும் என்பதும், ஆண்டவரை சந்திக்கும் வேளையில், "நல்லது உண்மையும் உத்தமமுள்ள ஊழியக்காரனே, உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி" (மத்.25:21) என்ற ஆண்டவரின் பாராட்டைப் பெறுவது மாத்திரமேயாகும்!

- நிரூபித்து வாழ்ந்த கிறிஸ்துவின் தாசர்கள்

## 'ஒரு கழுதை மூலமாய்' சூதாடியை இரட்சித்த தேவன்!

சூதாட்டத்தில் தேர்ச்சிபெற்ற ஒரு துன்மார்க்கன், தனக்கு வர வேண்டிய பணத்தை வசூலித்திட கழுதையின் மேல் ஏறி தன் கிராமத்தினின்று வடதிசை நோக்கிச் சென்றான். கிராமத்தின் எல்லையை அடைந்ததும், கழுதை மேலும் செல்ல மறுத்தது! கழுதையை மேலும் செலுத்த முடியாது போகவே, தென் திசையிலும் தன் கடன்காரர்கள் இருந்ததால், அந்த திசையில் தனது கழுதையை ஓட்டினான். ரஸ்தா தென்மேற்கிலும், தென்கிழக்கிலுமாக பிரியும் இடம் வரை கழுதை அமைதியாகச் சென்றது. ஆனால், தென்மேற்காக அவன் தெரிந்து கொண்ட பாதையில் கழுதை ஒரு அடிகூட முன் செல்ல மறுத்தது! உதைகளும், வசை மொழிகளும், மன்றாட்டுகளும் வீணாயிற்று!

பொறுமை இழந்த சூதாடி, கழுதையை அதின் விருப்பப்படியே போக விட்டான். அப்பொழுது அது, அவனுக்கு கொஞ்சம் கூட சிரமம் அளிக்காது அமைதியாகச் சென்றது. சிறிது நேரத்திற்குள்ளாக கழுதை ஒரு கிராமத்தை வந்தடைந்தது! **கழுதை அங்குள்ள தேவாலயத்தின் முகப்புவாசலின் முன் வந்து நின்றது.** பின்னர் அவன் சோர்வுடன் கழுதையிலிருந்து இறங்கி, ஆலயத்தின் அருகே சென்றான். வல்லமையான தேவ செய்திகளால் எழுப்புதலடைந்த அந்த கிராமத்து கிறிஸ்தவர்கள் பாடிய கீதங்களின் இன்னிசை அவனைக் கவரவே அவன் தேவ ஆலயத்தினுள் சென்றான். தங்கள் பாவங்களை கண்ணீருடன் அறிக்கையிடுபவரையும், கிறிஸ்துவால் தங்கள் வாழ்க்கையில் பெற்ற சந்தோஷத்தையும், சமாதானத்தையும் குறித்து மலர்ந்த முகத்துடனும், ஒளி வீசும் கண்களுடனும் சாட்சி கொடுப்பவர்களை அவன் அங்கு கண்டான். **தேவனது வல்லமையான பிரசன்னத்தில் அவன் தன் பாவங்களைக் குறித்து ஆழமாக உணர்த்தப்பட்டான்.** தன் பாவ அக்கிரமங்களை சபையில் அறிக்கையிட்டு, தேவன் தமது அதிசயமான கரத்தால் அந்த ஆலயத்திற்குத் தன்னை வழிநடத்தி வந்த விந்தையை எடுத்துரைத்தான். மனந்திரும்பிய அந்த சூதாடி பாவியினிமித்தம், பரலோகத்தில் பேரானந்தம் உண்டாயிற்று! வட மாநில பிராந்தியத்தில், இன்றும் அந்த குக்கிராமம் சாட்சியாக உள்ளது!

- சுவிசேஷ மலர்

பணம் அனுப்ப **QR** பயன்படுத்தவும்

maduraichristianfellowship@indianbk

பரலோக பொக்கிஷங்கள்

**Published and Owned by:**
**Madurai Christian Fellowship, Regd Society,**
***Editor* T.Rathnakumar, Madurai.**
**Printed by SFA Print (P) Ltd., Sivakasi.**